1993 மார்ச் 18]

எந்த நிலையில் அந்த வீட்டு வசதித் திட்டத்தின் செயலாக்கம் இருக்கிறது என்பதுதான். வாணியம்பாடியில் நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நில ஆர்ஜிதப் பணி முடிவுற்றவுடன் உடனடியாக அந்தப் பகுதியில் வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 137, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

137 —

சத்துணவுக் கூடங்களில் பணிபுரியும் பட்டதாரி அமைப்பாளர்கள்.

*11887—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சத்துணவுக் கூடங்களில் பணிபுரியும் அமைப்பாளர்களில் பட்டதாரிகளாக உள்ள அமைப்பாளர்களை அரசுப் பணிகளில் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சத்துணவுக் கூடங்களில் பணிபுரியும் அமைப்பாளர்களில் பட்டதாரிகளாக உள்ள அமைப்பாளர்களை அரசு பணிகளில் சேர்த்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் பணி புரிகின்ற அமைப்பாளர்களில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களும், பட்டதாரிகளும் 30 சதவீதத்திற்கு அதிகமானவர்கள் இருக்கிறார்கள். வேலை கிடைக்காத காரணத்தால் அப்படிப்பட்ட பட்டதாரிகள் எல்லாம் சத்துணவுக் கூட அமைப்பாளர்களாக பணியாற்றி வருகிறார்கள். தமிழக அரசு சார்பில் அந்த சத்துணவுத் துறைக்கே அரசு அதிகாரிகள் நியமிக்கப்படுகிற போது அந்தத் துறையில்

இருப்பவர்களில் பட்டதாரிகளுக்கு முதலிடம் கொடுத்து அவர்களைப் பணியில் அமர்த்துவதற்கு மீண்டும் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்களுக்கு பட்டதாரிகள் அளவுக்குத் தகுதி தேவையில்லை. ஏழை எளிய மக்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்களோ அல்லது தவறியவர்களோ மட்டுமே போதுமானது. ஆகவே பட்டதாரிகள் தேவையில்லாத இடத்தில், அவர்களுக்கு வேறு வேலை கிடைக்காத பட்சத்தில்தான் இந்த வேலைக்கு வருகிறார்கள். இந்த பட்டதாரிகள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். அப்படிப் பதிவு செய்திருக்கிற வகையில் அவர்களுக்கு வேலை கிடைக்கும்போது இதிலிருந்து சென்று விடுகிறார்கள். ஆகவே இந்த செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத்துறையின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் அரசுப் பணிக்கு அறிவிக்கிற போதும், அந்தத் துறைக்கு உயர் அதிகாரிகள் நியமிக்கப்படுகிறபோதும், இத்தகைய பட்டதாரிகளுக்கு முதலிடம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக குழந்தைகள் நல அமைப்பாளர்கள் முதுநிலை வரிசைப்படி ஊர்நல அலுவலர்களாகவும் பல நேரங்களில் சுகாதாரப் பணியாளர்களாகவும், ஊட்டச் சத்து மைய மேற்பார்வையாளர்களாகவும் பதவி உயர்வு அளிக்கப் படுகிறார்கள். அதில் பட்டதாரிகள், பட்டதாரிகளாக இல்லாதவர்கள் என்று அரசு பிரித்துப் பார்ப்பதில்லை. சத்துணவைப் பொறுத்தமட்டில் அனைவருக்கும் முடிந்தவரை உயர் பதவி அளிக்க சமூக நலத் துறை முயற்சி செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காஞ்சி பன்னீர் செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம். டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு குழந்தைகள் நல அமைப்பாளர்கள் எத்தனை பேருக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரியப்படுத்த முடியுமா என அறிய விரும்புகிறேன்.

1993 மார்ச் 18]

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டுக்குப் பின்னால் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், கடந்த இரண்டாண்டு களில் மட்டும் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்பேரில் 300 பேருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கும், கணவனை இழந்த விதவைகளுக்கும் முக்கியத்துவம் தருகிற வகையில், அமைப்பாளர்களாக நியமிக்க, வயது வரம்பும் கல்வித் தகுதியும் தளர்த்தப்படுமா? அப்படித் தளர்த்தி அவர்களுக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஒழ்வளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு, பேரவைத் தலைவர் அவர்களே, கணவனால் கைவிடப்பட்ட வர்கள், விதவைத் தாய்மார்களுக்கு இப்போதே முன்னுரிமை அளிக்கப்பட்டுத்தான் சத்துணவுப் பணிகளில் நியமித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பி னர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். மாண்புமிகு சட் மன்ற உறுப்பினர் அவர்கள் கொடுத்த பரிந்துரைகள் அந்த வகையில்தான் பரிசீலிக்கப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 138. திரு. தி. சாத்தையா, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

138—

இராஜபாளையத்தில் ''டாக்டர் அம்பேத்கார் தியாகி இமானுவேல்'' பெயரில் கல்லூரி அமைத்தல்.

* 11010—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) இராஜபாளையம் நகரில் ''டாக்டர் அம்பேத்கார் தியாகி இமானுவேல்'' பெயரில் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு கல்லூரி ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கல்லூரி துவங்கப்படும்?